# மார்த்தாண்டம் கல்லூரியில் விளையாட்டு விழா

**மார்த்தாண்டம், மார்ச் 29–**

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் விளையாட்டு விழா முதல்வர் டாக்டர் பால்ராஜ் தலைமையில் நடந்தது.

விளையாட்டுத்துறை உறுப்பினர் டாக்டர் அனிஷா வரவேற்றார். விளையாட்டுத்துறை இயக்குனர் டாக்டர் டேனியல் பேரின்பராஜ் அறிக்கை வாசித்தார். தாளாளர் டாக்டர் வினோத் குமார் பேசினார். கோவை பாரதியார் பல்கலை பதிவாளர் முருகவேல் போட்டிகளை துவக்கி வைத்தார்.

துறைகளுக்கு இடையிலான குழு போட்டியில் பெண்கள் பிரிவில் கணிதவியல் துறை மாணவிகளும், ஆண்கள் பிரிவில் கணிப்பொறி மென்பொருள் துறை மாணவர்களும் அதிக புள்ளிகள் பெற்று சாம்பியன் பரிசு பெற்றனர்.

அகில இந்திய பல்கலை மற்றும் மாநில அளவான தடகள போட்டியில் முதல் பரிசு பெற்ற அகில் ராமுக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. துறைகளுக்கு இடையிலான தடகள போட்டியில் ஆண்கள் பிரிவில் சாஜின், பெண்கள் பிரிவில் ரேஷ்மா ஆகியோர் முதலிடம் பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

டாக்டர் டேவிட் சாமுவேல் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை விளையாட்டுத்துறை ஒருங்கிணைப்பாளர் டாக்டர் விஜிகுமார் மற்றும் உறுப்பினர்கள் செய்திருந்தனர்.



▩ மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் விளையாட்டு விழா நடந்தது.